செ.வெ.எண்: 607/2016 நாள்: 07.09.2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

**ந.க.எண்.ஒ5/9445/2013**

## பத்திரிகைச்செய்தி

தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ள அம்மா திட்டத்தின் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்கள் 09.09.2016 வெள்ளிக்கிழமை அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மூன்று வட்டங்களில் கீழ்கண்டவாறு நடைபெறவுள்ளது.

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வருவாய் கிராமத்திற்கு மட்டும், குலசேகர விநாயகர் திருமண மண்டபம், அகஸ்தீஸ்வரத்தில் வைத்தும், விளவங்கோடு வட்டத்தில் மெதுகும்மல் வருவாய் கிராமத்திற்கு மட்டும், அரசு நடுநிலைப் பள்ளி, நடைக்காவில் வைத்தும், கல்குளம் வட்டத்தில் ஆற்றூர் வருவாய் கிராமத்திற்கு மட்டும், அரசு உயர்நிலைப் பள்ளி, வில்லுண்ணி கோணத்தில் வைத்தும், காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த அம்மா திட்டம் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டங்கள், பட்டா மாறுதல், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், குடும்ப அட்டை, வருவாய் வட்டாட்சியர் அதிகாரத்திற்குட்பட்ட நில தாவாக்கள், குடிநீர் மற்றும் சாலை வசதி போன்ற பொதுவான மனுக்களை பொதுமக்கள் அளித்து தீர்வு காணலாம் எனவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி)
கன்னியாகுமரி மாவட்டம்.

தலைமை உதவியாளர் (ஒ)

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.